# தேர்வாளர் கையேடு

**3 novembre 2013**

**Élection** Montréal

jevotepourmaville.ca

## உங்களுக்கு உங்களது உரிமைகள் குறித்துத் தெரிவிக்கத் தேர்தல் பொறுப்பு அதிகாரி விரும்புகிறார்.

### நீங்கள் வாக்களிக்க இயலுமா?

வாக்களிப்பதற்கு, **உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் பதியபட்டு,** வாக்கெடுப்பு நாளில் பின்வரும் தகுதிகள் உங்களுக்கு இருக்க வேண்டும்.

- குறைந்த பட்சம் 18 வயதுடையவராக இருக்க வேண்டும்.
- கடந்த ஆறு மாதங்களாக கியூபெக்கில் வசித்திருக்க வேண்டும்.
- கனேடிய பிரஜையாக இருக்க வேண்டும்; அத்துடன்,

### உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டுள்ளதா?

உங்கள் வீட்டில் நீங்கள் பெறும் அறிவிப்பில் நீங்கள் சரிபார்க்கலாம்.

### வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை எப்படிப் பதிவது?

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கானதோர் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு நீங்கள் திருத்துநர்கள் வாரியத்திற்குச் சென்றாக வேண்டும். உங்கள் சார்பாக, உங்களது உறவினர் ஒருவரோ, உங்கள் வாழ்க்கைத் துணையோ, அல்லது உங்களோடு வசித்துக் கொண்டிருக்கும் ஒரு நபரோ, விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

உங்கள் அடையாளப் பத்திரங்கள் இரண்டு விண்ணப்பதுடன் சமர்பிக்கப்படவேண்டும். அல்லது விண்ணப்பம் நிராகரிக்கபட்டு விடும்.

### முதலாவது ஆவணம்

முதலாவதில் உங்கள் பெரும் பிறந்த தேதியும் முதலில் குறிப்பிடப்படல் வேண்டும். **உதாரணம்:** பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், மருத்துவ அட்டை, கனேடிய கடவுப் பத்திரம்.

### இரண்டாவது ஆவணம்

இரண்டாவதில் உங்கள பெயரும் வசிபிடமும் குறுபிடப் பட்டிருக்க வேண்டும். **உதாரணம்:** சாரதிப் பத்திரம், தொலைபேசி அல்லது மின் இணைப்பு பற்றுச் சீட்டு.

### திருத்துநர்கள் வாரியம் எங்கே அமைந்துள்ளது?

திருத்துநர்கள் வாரியத்தின் முகவரிகளும், அவர்கள் எந்தெந்த நாட்களில் திறந்திருப்பார்கள் என்ற தேதி மற்றும் நேரங்களும், வீட்டில் நீங்கள் பெற்றுக் கொள்கிற அறிவிப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

### எப்பொழுது எங்கே வாக்களிப்பது?

வாக்களிப்பு நாளுக்குச் சில நாட்கள் முன்னர் உங்களுக்கு நினைவு படுத்தும் முகமாக எங்கு, எப்போது, நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்ற விபரங்களுடன் அறிவிப்பு கிடைக்கப் பெறுவீர்கள். வாக்களிக்கும் நாளில், காலை 10 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் சுட்டிக்காட்டியுள்ள முகவரிக்குச் செல்லுங்கள். நீங்கள் முன்-தேர்தலிலும் வாக்களிக்கலாம். உங்கள் முன்-வாக்களிப்பு மையத்தின் முகவரியும், திறந்துள்ள நாட்களும், நேரங்களும், வீட்டில் நீங்கள் பெற்றுக் கொள்ளும் அறிவிப்பில் காண்பிக்கப்படுகிறது. முன்-தேர்தலில் உள்ள அனைத்து வாக்களிப்பு மையங்களும், குறைவான நடமாட்டமுடைய நபர்கள் உபயோகித்துக் கொள்வதற்கானவையே.

### புதியது: வாக்களிப்பதற்கு நான்கு கூடுதல் நாட்கள்

உங்கள் நகரில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் வாக்களிப்பதற்கு, உங்களுக்கு நான்கு கூடுதல் நாட்கள் உள்ளன. அனைத்து நகர தேர்தல் அலுவலகங்களும், குறைவான நடமாட்டமுடைய நபர்கள் உபயோகித்துக் கொள்வதற்கானவையே.

உங்கள் நகரத் தேர்தல் அலுவலகம் திறக்கும் நாட்கள் மற்றும் நேரங்கள் குறித்த தகவல்களுக்கு, எமது இணையதளத்திற்குப் போய்ப் பாருங்கள் அல்லது தேர்தல் பொறுப்பு அலுவலர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

### எவ்வாறு வாக்களிப்பது?

**செய்முறை 1.** அதிகாரி வாக்காளர் பட்டியலில் உங்கள் பதிவை சரி பார்ப்பார்.

**செய்முறை 2.** நீங்கள் அடையாள ஆவணம் சமர்ப்பிப்பதன் மூலம் இளங்காட்டவேண்டும்.

**செய்முறை 3.** உங்களுக்கு வாக்குச் சீட்டுக்கள் கொடுக்கப்படுகின்றன.

**செய்முறை 4.** தேர்வை செய்வதற்கு இரகசிய வாக்களிப்புச்சாவடிக்கு செல்ல வேண்டும் உதவி வாக்கெடுப்பு அதிகாரி உங்களுக்குத் தரும் எழுது கோலால் மட்டுமே அடையாளம் இட வேண்டும்.

**செய்முறை 5.** தரப்பட்ட வாக்களிப்புப் பத்திரத்திரங்களில் உள்ள வட்டங்களில் ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் அடையாளம் இட வேண்டும்.

**செய்முறை 6.** முடிந்ததும் மீண்டும் மேசைக்கு வரவேண்டும். நீங்களாகவே வாக்குப் பெட்டியில் உங்கள் வாக்குப் பத்திரத்தை போட வேண்டும்.

**அவசியம்! வாக்களிப்பதற்கு, பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் உங்கள் அடையாளம் ஒப்புவிக்கப்பட வேண்டும்**

- உங்கள் மருத்துவ அட்டை
- உங்கள் சாரதிப் பத்திரம்
- உங்கள் கனேடிய கடவுப் பத்திரம்
- உங்கள் இந்திய பத்திரம் அந்தஸ்து
- உங்கள் கனேடிய படையினருக்கான அடையாள அட்டை

நீங்கள் வசிக்குமிடத்திலேயே வாக்களிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், தேர்தல் பொறுப்பு அலுவலரின் அலுவலகத்தைத் தொடர்பு கொள்வதன் மூலம், அதற்கு எப்படி பதிவு செய்து கொள்வது என்பது குறித்த தகவல்கலைப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஏதேனும் கேள்விகள்?

- எங்களது இணையத்தளம் மூலம் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்: **www.jevotepourmaville.ca**
- எங்களுடன் தொலைபேசி மூலம் பின்வரும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள்: **514 872-VOTE (8683)**
- மின் அஞ்சல் பின்வருமாறு: **election@ville.montreal.qc.ca**

Manuel de l'électeur – Résumé – Tamoul
ஆதாரம்: Le Directeur général des élections du Québec